DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

அரக்கோணம் குற்றவியல் நடுவர் எண்.1 நீதிமன்றம் 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் புதன்கிழமை 29ம் நாள் சாட்சியாகிய ஜோதி என்பவரின் வாக்குமூலம் 1983 ஆம் ஆண்டு 10வது சட்ட விதியின்படி திருமதி. K.மம்தா Gr–III பென்ச் கிளார்க், என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஜோதி | வயது | 73 |
| க/பெ. | எத்திராஜ் | இனம் | பெண் |
| கிராமம் | மேல்பாக்கம் | தொழில் | இல்லத்தரசி |
| சமயம் | | தாலூக்கா | |

**C.C.27/2024**

(1 முதல் 3 எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் நீதிமன்றத்தில் ஆஜர்.)

**முதல் விசாரணை 29.01.2025 அ.சா.3**

1. நான் மேல்பாக்கத்தில் வசித்து வருகிறேன். அ.சா.1 ஓவியா எனது மருமகள். அ.சா.2 அருள் எனது மகன். 04.06.2021ம் தேதி விடியற்காலை 5.00 மணிக்கு நான் பெருக்கி கொண்டிருந்தபோது எதிர் வீட்டை சார்ந்த கருணாகரன், துளசி, சித்ரா, கமலகண்ணன் ஆகியோர்கள் அடுப்பில் தண்ணீர் காயவைத்து கொண்டிருந்தார்கள்.

2. எனது மருமகள் இங்கே ஏன் அடுப்பை பற்றவைக்கிறீர்கள் என்று கேட்டதற்கு முற்களை போட்டார்கள். எனது மருமகளை அவர்கள் அசிங்கமாக பேசினார்கள். கமலகண்ணன் என்பவர் எனது மருமகளை அடித்துவிட்டார்.

3. மூன்று நபர்களும் எனது மருகளை தாக்கினார்கள். சத்தம் கேட்டு எனது மகன் வந்து கேட்டதற்கு எனது மகனையும் அசிங்கமாக திட்டினார்கள். எனது மகனையும் தாக்கினார்கள். சம்பவம் தொடர்பாக காவல் நிலையம் சென்று எனது மருமகள் புகார் கொடுத்தார். மறுநாள் போலீசார் வந்து விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

4. எதிரிகள் வழக்கறிஞர் ஆஜராகி குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது.

மறு விசாரணை : இல்லை.

Taken down by me/before me
in Open Court,
Interpreted/read over
to the witness and admitted by
the deponent to be correct.

Judicial Magistrate No.I,
Arakkonam.